## தமிழ்மொழி
## ஆண்டு 4

**கதையை நிரல்படுத்துக**

“ஐயோ! மழை பெய்ய ஆரம்பித்து விட்டதே! என் பஞ்சு மூட்டை மழையில் நனைந்தால் ஊறி கனத்துப் போய்விடுமே! அதைத் தூக்கிக் கொண்டு எப்படி உயரே பறப்பது.” எனப் புலம்பத் தொடங்கியது ஒரு காகம்.

சற்று நேரத்திற்கெல்லாம் வானம் கருத்து, மழைப் பெய்யத் தொடங்கியது.

தந்திரமுள்ள காகம் பஞ்சு மூட்டையைத் தூக்கிக்கொண்டு பறக்க ஆரம்பித்தது. பாவம் மற்றொரு காகமோ கனமான உப்பு மூட்டையைத் தூக்கிக்கொண்டு பறக்க ஆரம்பித்தது.

உப்பு மூடையைச் சுமந்த காகம் இறுதியில் வெற்றிப் பெற்றது.

இரண்டு காகங்களுக்கு இடையில் போட்டி ஒன்று நடைபெற்றது. அவை இரண்டும் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு பறக்கும் போட்டியை வைத்துக் கொண்டன.

“அடடே! இனி நமக்கு நல்ல காலம் தான். மழைப் பெய்ய ஆரம்பித்து விட்டது. என் உப்பு மூட்டை கரைந்து கனமில்லாமல் போய்விடும். இனி என்னால் மிக உயரத்தில் பறக்க இயலும் ,” என மகிழ்ச்சியுடன் கூறியது மற்றொரு காகம்.

ஒரு மூட்டையில் பஞ்சு வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு மூட்டையில் உப்பு வைக்கப்பட்டிருந்தது.

1
2
3
4
5
6
7

ஆக்கம் : ஆசிரியர் திருமகள் குப்புசாமி

LIVEWORKSHEETS